# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## IA.No.2/2023

## in

## O.S.No.123/2022

சாட்சி : PW– 1
பெயர் : திரு. சண்முகம் தேதி : 20.08.2026

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:– ( பிரதிவாதி தரப்பில்)

தாவா முதல் அயிட்ட சொத்து எனது மனைவி விஜயாவிற்கு பாத்தியப்பட்டது ஆகும். என் மனைவி 1991ம் ஆண்டு அந்த சொத்தை கிரயம் பெற்றார். அவர் ஒரு பி.கே.பி. சுப்ரமணி என்பவரிடமிருந்து கிரயம் பெற்றார். அது 796 ச.அடிகள் ஆகும். அதன் சர்வே எண்கள் என்னவென்றால் அது 4, 5 சர்வே எண்களில் அடங்கியுள்ளது. ஒவ்வொரு சர்வே எண்ணிலும் எவ்வளவு விஸ்தீரணம் அமைந்துள்ளது என்பது எனக்கு தெரியாது. என் மனைவி பெயரிலுள்ள அசல் கிரய பத்திரத்தையும், பி.கே.பி சுப்ரமணி பெயரிலுள்ள அசல் கிரயப்பத்திரத்தையும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி சொத்திற்கு தற்போதைய T.S.No.7 வார்டு AJ பிளாக் 11 ஆகும். மேற்படி T.S.No.7க்கு உண்டான வருவாய் ஆவணங்களை ஒப்படைத்துள்ளேனா என்றால் எங்கள் கிரய பத்திரத்திலேயே அது உள்ளது. நான் சொல்லும் வருவாய் ஆவணங்கள் எதுவும் என்மனைவியின் கிரயப்பத்திரத்தில் இல்லை என்றும, மேற்படி T.S.No.7க்கு உண்டான TSLR நகல், புல வரைபடம் ஆகியவற்றினை தாக்கல் செய்யாத காரணத்தினால் நான் சொல்லும் டவுன் சர்வே எண், வார்டு எண் மற்றும் பிளாக் எண் தவறானது என்றால் சரியல்ல.

R Velaras
Digitally signed by R Velaras
Date: 2026.08.20 16:39:14 +0530

I Additional District Judge,
Salem

மேற்படி இடம் காலியிடமாகதான் உள்ளதா என்றால் ஆமாம். தாவா 2வது அயிட்ட சொத்தை 1996ம் ஆண்டில் ஒரு ரத்தினம் என்பவரிடமிருந்து நான் கிரயம் பெற்றேன். 1996ம் ஆண்டு ரத்தினம் எனக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லும் கிரயப்பத்திரத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 16.10.2019 அன்று தாவா 2வது அயிட்ட சொத்தை நான் வாங்கியதாக சொல்லியிருந்தால் அது தவறா என்றால் இல்லை. 1996ம் ஆண்டில் பவர் பத்திரம் தான் கொடுக்கப்பட்டது. ரத்தினத்தின் வாரிசுகள் 2019ம் ஆண்டில் மேற்படி பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்து விட்டார். நான் கிரயம் பெற்ற சொத்தின் TS.No.7/15 ஆகும், வார்டு AJ ஆகும். பிளாக் 11 ஆகும். நாங்கள் இவ்வழக்கில் மேற்படி TS.No.7/15 வார்டு AJ பிளாக் 11 என சொத்து விவரத்திலேயே சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது கிரய ஆவணத்தில் மேற்படி TS.No.7/15 வார்டு AJ பிளாக் 11 என்பது இல்லை என்றால் சரியல்ல. நான் கிரயம் பெற்ற சொத்திற்கு செக்குபந்தி தெரியும். S.விஜயா நிலத்திற்கு தெற்கு, ரோடிற்கு வடக்கு, ராஜம்மாள் சொத்திற்கு மேற்கு, ஓடைக்கும் கிழக்கு ஆகும். இதன் மத்தியில் நான் 1200 ச.அடிகள் கொண்ட சொத்தை கிரயம் பெற்றுள்ளேன். மேற்படி கிரயம் பெறுவதற்கு முன்பாக அளந்து அத்து காட்டி தான் வாங்கினேனா என்றால் ஆமாம். நான் கிரயம் பெறும்போது அது காலியிடமாகதான் இருந்தது. எனது மனைவி சொத்திற்கு தென்புறத்தில் நான் கிரயம் பெற்றேன். எங்கள் சொத்து ஒன்றுக்கொன்று ஒட்டினாற்போல் உள்ளது. T.S.No.7/15க்கு உண்டான TSLR நகல், புல வரைபடம் ஆகியவற்றினை தாக்கல் செய்யாத காரணத்தினால் நான் சொல்லும் டவுன் சர்வே எண், வார்டு எண் மற்றும் பிளாக் எண் தவறானது என்றால் சரியல்ல. நான் கிரயம் பெற்ற சொத்திற்கு கிழக்கில் பிரதிவாதியின் சொத்து உள்ளது. நான் தாவா 2வது அயிட்ட சொத்தை கிரயம் பெறுவதற்கு 10 ஆண்டுகளுக்கு

R Velaras Digitally signed by R Velaras Date: 2026.08.20 16:39:22 +0530

I Additional District Judge,
Salem

முன்பாகவே பிரதிவாதி அவரது சொத்தை கிரயம் பெற்றுவிட்டார் என்றால் இருக்கலாம். அவர் 2 கிரய பத்திரங்கள் மூலமாக அந்த சொத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால் பெற்றுள்ளார். பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்திற்கு கிழக்கில் இருந்த புறம்போக்கு நிலத்திற்கு அரசால் பிரதிவாதியின் பெயருக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அதுபோன்ற புறம்போக்கு நிலம் அங்கில்லை. பிரதிவாதி 2009ம் ஆண்டிலேயே அவரது சொத்துகளை கிரயம் பெற்றும் அரசிடமிருந்து பட்டா பெற்றும் 3 அயிட்ட சொத்துகளை அவர் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. மேற்படி சொத்துகளில் பிரதிவாதி செட் அமைத்து கல்லிருந்து மாவு அரைக்கும் இயந்திரம் அமைத்து தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான். 2010ம் ஆண்டிலிருந்து நான் கிரயம் பெறும் வரையிலும் பிரதிவாதி அந்த சொத்துகளில் எவ்வித இடையூறும் இன்றி அனுபவம் செய்து தொழில் செய்து வந்தார் என்றால் சரியல்ல. பல்வேறு இடையூறுக்கு இடையே தான் பிரதிவாதி மேற்படி சொத்தில்து இருந்து வருகிறார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள கட்டிட அமைப்பு பிரதிவாதியுடையது என்றால் சரிதான். மேற்படி புகைப்படம் **பி.சா.ஆ–1** ஆகும். (**மேற்படி புகைப்படத்திற்கு பில் ரசீது இல்லை என்று வாதிகளின் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபணை குறித்து வழக்கு முடிவு செய்யப்படும் சமயத்தில் தீர்மானிக்கப்படும்**). பிரதிவாதிக்கு அரசால் கொடுக்கப்பட்ட பட்டா சொத்திகளிலும், பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்துகளிலும்தான் மேற்படி கட்டிடம் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு அரசால் பட்டா கொடுப்பதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை. அது தவறான பட்டாவாக இருக்கலாம். பிரதிவாதி பெயருக்கு அரசால் பட்டா கொடுக்கப்பட்டது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிக்கு அரசால் கொடுக்கப்பட்ட பட்டா தவறாக கொடுக்கப்ட்டுள்ளது என்று நான் வருவாய்

R Velaras

Digitally signed by R Velaras
Date: 2026.08.20 16:39:28 +0530

I Additional District Judge,
Salem

கோட்டாட்சியருக்கு மேல்முறையீடு செய்தேனா என்றால் செய்தேன். மேற்படி மேல்முறையீடு இன்னும் முடிவு செய்யப்படவில்லை, நிலுவையில் உள்ளது. வருவாய் கோட்டாட்சியரிடம் கொடுத்துள்ள மேல்முறையீடு நிலுவையில் உள்ள சமயத்தில் பிரதிவாதியின் மீது இவ்வழக்கை தாக்கல் செய்யவேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்றால் எனது சொத்தின் சுவாதீனம் எனக்கு வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்தேன். பிரதிவாதி எந்த தேதியில் ஆக்ரமிப்பு செய்துள்ளார் என்பதையும், எவ்வளவு சதுரடிகள் கொண்ட சொத்தை ஆக்ரமிப்பு செய்துள்ளார்கள் என்ற விவரத்தையும் எனது வழக்கிலும், முதல்விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 2010ம் ஆண்டிலிருந்து பிரதிவாதி அவர் கிரயம் பெற்ற சொத்துகளிலும், அரசால் பட்டா கொடுக்கப்பட்ட சொத்திலும் செட் அமைத்து தொழில் செய்து வருகின்ற காரணத்தினால் நான் 2019ம் ஆண்டில் காலியிடமாக கிரயம் பெற்றேன் என்று சொல்லும் சங்கதி தவறானது என்றால் சரியல்ல. மேற்படி செட்டிற்கு மேற்கு பகுதியில் சுமார் 3 முதல் 4 அடி அகல சாக்கடை கால்வாய் செல்கிறது.அது தான் மேற்படி செட் அமைந்துள்ள சொத்திற்கு மேற்கு பகுதி எல்லை என்றால் சரிதான். நான் கிரயம் பெற்றுள்ள சொத்திற்கும், மேற்கு எல்லை மேற்படி சாக்கடை கால்வாய் என்றால் சரிதான். ஆனால் எனது கிரய பத்திரத்தில் மேற்கு பகுதி செக்குபந்தியாக மேற்படி சாக்கடை கால்வாயை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சொலலும் சர்வே எண்.கள் பிரதிவாதி அனுபவித்து வரும் சொத்திற்குள் இல்லை என்றும், எனது சொத்திற்கும் பிரதிவாதியின் சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதி 2010ம் ஆண்டிலிருந்து கட்டிடம் கட்டி சொத்தை அனுபவித்து வருவதால் 2019ம் ஆண்டில் நான் காலியிடமாக சொத்தை கிரயம் பெற்றுக்கொண்டு பிரதிவாதியின் சொத்திற்குள் எனது சொத்து உள்ளதாக தவறாக

R Velaras
Digitally signed by R Velaras
Date: 2026.08.20 16:39:33 +0530

I Additional District Judge,
Salem

கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது கிரய ஆவணத்திலுள்ள புல எண் மற்றும் விஸ்திரணமும் பிரதிவாதியின் சொத்திற்கான புலஎண் மற்றும் விஸ்தீரணமும் வெவ்வேறானது என்றால் சரியல்ல. தாவா முதல் அயிட்ட சொத்திற்கு இது வரையிலும் பட்டா பெறவில்லை என்றால் சரியல்ல. தாவா 2 அயிட்ட சொத்திற்கும் நான் பட்டா வாங்கவில்லை என்றால் பட்டாவிற்காக விண்ணப்பித்தபோது தான் மேற்படி தவறுகள் தெரியவந்தது. பட்டாவிற்காக நான் எப்போது விண்ணப்பம் செய்தேன் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

பிரதிவாதியின் தரப்பில் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

R Velaras
Digitally signed by R Velaras
Date: 2026.08.20 16:39:38 +0530

I Additional District Judge,
Salem